30.04.2026

OS No: 174/2021

வா.சா. 2 திரு. ஜான் பீட்டர் சேவியர் த/பெ சூசை

**<u>1 ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதி தனிஸ்லாஸ் எனக்கு என்ன உறவு என்றால் சித்தப்பா உறவு வேண்டும். தாவா சொத்து மிக்கேல் என்பவருக்கு பூர்வீக பாத்தியம் என்பதனை காட்ட கூடிய ஆவணம் எதுவும் தாவா வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் சித்தப்பா தாவா சொத்தினை எந்த தேதியில் கிரையம் பெற்றார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. மிக்கேலும் 1 ஆம் பிரதிவாதியின் தந்தையான அந்தோணியும் தாவா சொத்தினை வாய் மொழியாக பாகம் பிரித்து கொண்டதாக நான் சொல்வதில் மேற்படி பாகப்பிரிவினை எப்போது நடைபெற்றது என்றால் தெரியாது. வாதிக்கு தாவா சொத்தினை உயில் மூலமாக கொடுத்தாக சொல்வதில் மேற்படி உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணமா அல்லது இல்லையா என எனக்கு விபரம் தெரியுமா என்றால் தெரியாது. 1 ஆம் பிரதிவாதிக்குரிய சொத்தும் வாதியினுடைய சொத்தும் அருகருகே அமைந்துள்ள சொத்துக்கள் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதியின் தந்தை அமல்ராஜ் மற்றும் தாய் ஆகியோர் ஆசிரியர்களாக பணிபுரிந்தவர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தினை வாதி வகையறா அனுபவம்செய்தது குறித்து ஆவணங்கள் உள்ளதா என்றால் ஆவணங்கள் இல்லை ஆனால் அனுபவித்தார்கள். வாதி எனது அண்ணன் என்பதால் வாதிக்கு ஆதரவாக தாவா சொத்தினை வாதி அனுபவம் செய்வதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன்என்றால் சரியல்ல. வாதி தாவா சொத்தை எந்த காலத்திலும் அனுபவிக்க

வில்லை1 ஆம் பிரதிவாதி தான் தாவா சொத்தினை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

PANDY R

Digitally signed by PANDY R
Date: 2026.04.30 15:48:36 +0530